தேவையான இடத்தினை வனத் துறையிடமிருந்து நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் பெற்று, மீண்டும் அரசு விதைப் பண்ணை அமைக்க அரசால் ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது செங்கம் சட்டமன்றத் தொகுதி, விவசாயம் நிறைந்த பகுதி என்பதாலே அங்கு பண்ணை அமைத்தால், ஆயிரக்கணக்கான விவசாய மக்கள் பயனடைவார்கள். மற்றும் தரமான விதைகள் அம்மா அவர்கள் ஆட்சியிலே கிடைக்கின்ற காரணத்தாலே விவசாயிகள் மீண்டும் அங்கே பயனடைவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைத்துத் தருவோம் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

புதிய பேருந்து நிலையம்

***2922— திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒரே தலைவி, தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்கள் தந்து மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கக்கூடிய மக்களின் முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி வினாவிற்கு விடை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க 2013-2014 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி வருவாய்த் திட்டத்தின்கீழ் 184 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஊராட்சியை ஒட்டி பெங்களூரு-சென்னை ஆறுவழிச் சாலை செல்கிறது. சூளகிரியிலே அரசு மருத்துவமனை, காவல் நிலையம், பத்திரப் பதிவு அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை அலுவலகம், பொதுப் பணித் துறை அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. தொகுதியின் மையப் பகுதியாக இந்த சூளகிரி ஊராட்சி இருக்கின்ற காரணத்தாலும், நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சுற்றி இருக்கின்ற காரணத்தாலும், அங்கே காய்கறி மார்க்கெட் அமைந்திருக்கின்ற காரணத்தாலும் பொது மக்கள் ஆயிரக்கணக்கிலே தினந்தோறும் வந்து சென்றுகொண்டிருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான பேருந்துகள் அந்த வழியிலே சென்று வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தக் காரணத்தினால்தான் அங்கே நவீனமயமாக்கப்பட்ட ஒரு பெரிய பேருந்து நிலையம்*

அமைக்கப்படவேண்டும் என்று நான் கேட்டிருந்தேன். அதன் அடிப்படையிலே தற்போது அங்கே பேருந்து நிலையம் 1¾ ஏக்கர் அளவிலே ரூ.184 இலட்சத்திலே அமைக்க அறிவிக்கப்பட்டு, நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையிலே தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பேருந்து நிலையம் ஏதோ பெயரளவிற்கு, ஆறு பேருந்துகள் மட்டுமே நிற்கிற அளவிற்கு சிறிய இடத்திலே கட்டப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து நிலையம் பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு இல்லாத சூழ்நிலை உள்ளதால், தற்போது கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை பெரிய அளவில் மாற்றிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா எனக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் அங்குள்ள மக்களுக்கு என்ன தேவையோ அதை அறிந்துதான் செய்வார்கள். இந்தப் பேருந்து நிலையம் கட்டுவதில்கூட அங்கு இருக்கின்ற அதிகாரிகளிடம் என்னென்ன தேவை, எத்தனை பேருந்துகள் அங்கு வருகின்றன என்பதை அறிந்துதான் இத்திட்டத்தை அம்மா அவர்கள் தந்துள்ளார்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, சூளகிரி ஊராட்சியில் 184 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, 26-8-2013 அன்று நிருவாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வசதிகள் அனைத்துமே மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு*

2014 டிசம்பர் 4]

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை இங்கே பதிவு செய்கிறார். அந்தப் பேருந்து நிலையத்தில், பேருந்து நிறுத்த கட்டடம், பேருந்து நுழைவுப் பகுதி மற்றும் வெளியேறும் பகுதிகளில் அலங்கார வேலைப்பாடுகளுடன்கூடிய நுழைவு வளைவுகள், பேருந்து நிலையத்தின் உட்புறத்தில் சிமென்ட் தளம், பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு கழிவறைகளுடன்கூடிய ஓய்வறை, ஆண் மற்றும் பெண் பயணிகளுக்கு பிரத்யேக கழிவறைகள், வடிகால், சுற்றுச்சுவர், மழைநீர் சேகரிப்பு அமைப்பு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிப்பதற்கான உபகரணங்கள், சூரிய ஒளி மின் விளக்குகள், பூங்காக்கள், பயணிகள் காத்திருப்போர் பகுதிகளில் அமரும் இருக்கைகள் உட்பட அனைத்து வசதிகளும் அங்கே அமைக்கப்படுகின்றன. இதில் காத்திருப்போர் கூடம், நுழைவு வளைவுகள், கழிவுநீர் கால்வாய், சுற்றுச்சுவர் கட்டுதல், மின் வசதி மற்றும் இதர வசதிகள் அமைக்கும் பணிகள் நீங்கலாக அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. மொத்த மதிப்பீட்டுத் தொகையான 184 இலட்சம் ரூபாயில் இதுவரை 86 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. மக்கள் எதிர்பார்க்கும் அனைத்து வசதிகளும் அந்தப் பேருந்து நிலையத்தில் செய்யப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையத்திற்கான திட்ட மதிப்பீட்டில், 184 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1.71 ஏக்கர் அளவில் பேருந்து நிலையம் கட்டப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது. தற்போது வெறும் 80 சென்ட் நிலப்பரப்பில் மட்டும்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தப் பேருந்து நிலையத்திற்கான பணிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. ஆக, மீதியுள்ள ஒரு ஏக்கர் நிலம் என்பது, உயரமாக இருக்கக்கூடிய பாறைகளாகவும், குண்டும்குழியுமாகவும் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த ஒட்டுமொத்தமான

அந்த வசதிகளோடு, அந்தப் பேருந்து நிலையம் வெறும் 80 சென்ட் நிலப்பரப்பில் அமைந்தால், எதிர்காலத்தில் பொது மக்களுக்கு முழு அளவில் பயன்படாது. ஆகவே, ஆரம்பக் கட்ட நிலையில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்திட வேண்டுகிறேன். நான் தெரிவிக்கும் செய்திகள் உண்மை என்று நீங்கள் கருதுவீர்களேயானால், வளர்ந்து வரக்கூடிய அந்தப் பகுதியின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, அந்தப் பேருந்து நிலையத்தை இன்னும் விரிவாக்கம் செய்திட வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அந்தப் பேருந்து நிலையம் அமைய இருப்பது ஊராட்சிப் பகுதி. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 2006 முதல் 2011 வரை ஐந்தாண்டு கால ஆட்சியில், ஊராட்சிப் பகுதிகளில், நான்கு பேருந்து நிலையங்கள் மட்டும்தான் 2.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டன. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே மூன்றரை ஆண்டுகளில் மட்டும், கிட்டத்தட்ட 26.39 கோடி ரூபாயிலே, 18 பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கு இன்றைக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்து நிலையம் அமைய இருப்பது மலைப் பகுதி என்று குறிப்பிட்டார்கள். அங்குள்ள சூழ்நிலைகளை ஆராய்வதற்கு அதிகாரிகளை அனுப்பி, மக்களுக்குத் தேவைப்பட்டால், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*